09.01.2024 OS.No. 155/2018

சாட்சி : வா.சா.1 அமுதா.

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை : (6, 7 பி**ரதிவாதிகள் வழக்கறிஞர்)

சர்வே எண் 72/2 வடக்கு பகுதி அழகப்பன் பெயரில் யுடிஆர் சமயத்தில் பெயர் மாற்றம் ஏற்பட்டது பற்றி எனக்கு தெரியும். தாவா சொத்தில் என் தகப்பனாருக்கு தனித்த பாத்தியப்பட்ட சொத்து என்றும் அதில் அழகப்பனின் கூட பிறந்தவர்கள் யாருக்கும் எந்த பாத்தியமும் இல்லை என்று சொன்னால் சரிதான். 14.06.1982ல் குடும்ப பாகப்பரிவினை எழுதிக்கொள்ளப்பட்டது. அதில் தாவா சொத்து பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. அதில் தாவா சொத்தையும் சேர்த்து பிரிவினை செய்ய எதுவும் முயற்சி செய்யவில்லை. அதனால் தான் மூக்கையா சேர்வையின் மனைவி வைரத்தாள் மூக்கையா சேர்வை இறக்கும் வரை எந்த ஆட்சேயபணையும் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து என் தகப்பனார் அழகப்பனோ அவரின் சகோதரரோ எந்த ஆட்சேயபணை செய்யவில்லை என்றால் சரிதான். நான் 1976 ஆம் ஆண்டு பிறந்தேன். 2ம் வாதி எந்த வருடம் பிறந்தார் என்று எனக்கு தெரியாது. என் சகோதரர்கள் சுப்பிரமணி மற்றும் பாண்டித்துரை எந்த வருடம் பிறந்தார்கள் என்று தெரியாது. எனக்கு 1991 ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. 2ம் வாதிக்கு 1995ல் திருமணம் நடந்தது. நான் திருமயத்தில் திருமணம் செய்துள்ளேன். 2ம் வாதியை வேட்டைக்காரன்பட்டியில் திருமணம் செய்து கொடுத்தது என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பு என் தகப்பனார் மற்றும் சகோதரர்களுடன் ஒரே வீட்டில்தான் வசித்து வந்தோம். குடும்பத்தார்களிடேயே எந்தவித மனஸ்தாபமும் இல்லை. 05.4.2005 ம் தேதியில் தாவா சொத்தை என் தகப்பனார் 4ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ4 கிரையப்பத்திரத்தின் மூலம் விற்று விட்டார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் தாவா சொத்து தனக்கு தனித்த பாத்தியப்பட்டது என்ற சொல்லியிருக்கிறார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ3 உயில் ஆவணம் பற்றி என் தகப்பனார் எனக்கு சொன்னார். மேற்படி உயில் பற்றி என் அம்மாவிற்கு தெரியும். மேற்படி உயில் அடிப்படையில் தான் யுடிஆர் ல் பட்டா ஏற்பட்டதா என்றால் இல்லை. பட்டா முன்பே வந்து விட்டது. மேற்படி உயில் பற்றி என்னுடைய சகோதரர்களுக்கு தெரியும். மேற்படி உயிலின் அடிப்படையில் என் சகோதரர்கள் இன்னும் பட்டா மாற்றவில்லை. 9 முதல் 19 வரை உள்ள பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரை படித்து பார்த்தேன். அதில் அவர்கள்

உயில் போலியானது என்று சொல்லியது தவறு. மேற்படி உயிலானது வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி உயிலில் உள்ள கையெழுத்து மூக்கையா சேர்வையின் கையெழுத்து இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து தொடர்பாக எங்களுக்கு கருப்பையா வகையாறாருக்கும் பஞ்சாயத்து நடந்ததுக்கு எந்த வித ஆவணமும் நீதிமன்றத்தில் ˙தாக்கல் செய்ய வில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள முள்வேலி 6,7 பிரதிவாதிகளால் அடைக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கருப்பையா வகையறாவே இந்த வழக்கில் ஒரு தரப்பினாராக சேர்க்க வில்லை என்றால் இடம் எங்கள் இடம் என்பதால் சேர்க்கவில்லை. தாவா சொத்தின் தற்போதைய சந்தை மதிப்பு எனக்கு தெரியாது. என் தகப்பனார் சரியாகத்தான் விற்றுவுள்ளார் என்றும் தற்போது விலை மதிப்பு கூடிவிட்டதால் பொய்யாக வழக்கு போட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு என் தகப்பனாருதான் முழு உரிமையாளர் என்றும் அதை அவர் சரியான பிரதிபிரயோசனத்திற்கு 4 ம் பிரதிவாதிக்கு விற்று உள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. 4ம் பிரதிவாதி தாவா சொத்தை தனது மனைவியான 5ம் பிரதிவாதிக்கு செட்டில்மென்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றும் அதில் 50 சென்டை 6,7 பிரதிவாதிகளுக்கு 19.10.2016ல் பதிவு கிரையம் 5ம் பிரதிவாதி கொடுத்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திரு.மு.வீரணன் M.A., L.L.M.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.